today Ayudha pooja.

# டெல்லி சுல்தான்கள்.

↳ இந்தியா மீது முஸ்லிம்கள் நடத்திய படையெடுப்புகளின் விளைவாக டெல்லி சுல்தானியம் நிறுவப்பட்டது. அது 1206 முதல் 1526 ஆம் ஆண்டு வரை நீடித்தது.

## சுல்தான்களின் காலம் - 1206 to 1526

1206 - 1526

↳ இக்கால கட்டத்தில் இந்தியாவில், 5 வெவ்வேறு வம்சங்கள் அடுத்தடுத்து ஆண்டன.

அடிமைகளோ

1. அடிமை (or) மாம்லுக் வம்சம் [1206 - 1290]

2. கில்ஜி வம்சம் [1290 - 1320]

3. துக்ளக் வம்சம் [1320 - 1414]

4. சையது வம்சம் [1414 - 1451]

5. லோடி வம்சம் [1451 - 1526]

1. அடிமை [மாம்லுக்] வம்சம் :- [1206 - 1290]

↳ அடிமை வம்சம் மாம்லுக் வம்சம் என்றும் அழைக்கப்படுகிறது.

↳ மாம்லுக் வம்சம் என்ற குர்ஆன் சொல்லுக்கு அடிமை என்று பொருள். கிபி 1206 முதல் 1290-ம் ஆண்டு வரை அடிமை வம்சம் டெல்லியில் ஆட்சி புரிந்தது.

இக்காலத்தில் மூன்று மரபுகள் ஏற்படுத்தப்பட்டன. அவையாவன:-

1. குத்புதீன் ஐபக் நிறுவிய குத்பி மரபு [1206-1211].
2. இல்துமிஷ் நிறுவிய முதல் இல்பாரி மரபு [1211-1266].
3. பால்பன் நிறுவிய 2-வது இல்பாரி மரபு [1266-1290].

1. குத்புதீன் ஐபக் :-

↳ கோரி முகமதுவிடம் அடிமையாக இருந்தவர் குத்புதீன் ஐபக். முகமது கோரி, குத்புதீன் ஐபக்கை இந்தியப் பகுதிகளுக்கு ஆளுநராக நியமித்தார். டெல்லிக்கு அருகிலுள்ள இந்திரபிரஸ்தம் என்ற இடத்தில் ஐபக் தனது ராணுவ நிலையத்தை அமைத்துக் கொண்டார்.

↳ 1206-ம் ஆண்டு கோரி இறந்தவுடன், ஐபக் தனது சுதந்திரத்தை அறிவித்துக் கொண்டார். இவர் 1206 ஆம் ஆண்டு ஜூன் 24-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். கோரி அரசுடனான அனைத்து உறவுகளையும் துண்டித்துக் கொண்டார். இவ்வாறு அடிமை வம்சத்திற்கும், டெல்லி சுல்தானியத்திற்கும் குத்புதீன் ஐபக் அடிகோலினார்.

↳ "சுல்தான்" என்ற பட்டத்தை சூட்டிக் கொண்ட அவர் லாகூரை தலைநகராக்கினார். [முதலில் டெல்லி தலைநகர்]

↳ முஸ்லிம் எழுத்தாளர்கள் ஐபக்கை "லாக் பக்ஷ்" என அழைக்கின்றனர். அவர்களுக்கு தாராளமாக கொடைகளை வழங்கியதால் அவ்வாறு அழைக்கப்பட்டார்.

↳ "ஹசன் நிசாமி", "பக்ரே முதிர்" என்ற சிறந்த அறிஞரை ஐபக் ஆதரித்தார்.

↳ சூஃபித் துறவி "குவாஜா குத்புதீன் பக்தியார்" என்பவரின் பெயரில் அவர் குதுப்மினாரை கட்டத்தொடங்கினார் பின்னர் அது இல்த்துமிஷ் காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது.

↳ 1210-ம் ஆண்டு குதிரைப் போலோ விளையாட்டில் ஈடுபட்டிருந்த போது ஐபக் தவறி விழுந்து இறந்தார். அடுத்து அவரது மகன் ஆரம் பக்ஷ் ஆட்சிப் பொறுப்பேற்றார். 8-மாதங்களுக்குப் பிறகு இல்த்துமிஷ் அவரை அகற்றிவிட்டு டெல்லி சுல்தானாகப் பதவியேற்றார்.

## குத்புதீன் ஐபக் பற்றிய ஒரு மதிப்பீடு:

↳ குத்புதீன் ஐபக் ஓர் இஸ்லாமிய மதப்பற்றாளர். இராணுவத்தின் வலிமையை பயன்படுத்தி மாம்லுக் ஆட்சியை நிலை நிறுத்தினார்.

↳ குத்புதீன் ஐபக் அஜ்மீரில் குவ்வதுல் இஸ்லாம் என்ற மசூதியையும், டெல்லியில் தாய்தின்கோ-ஜோன்பரா என்ற மசூதியையும் கட்டினார்.

↳ குத்புதீன் ஐபக் தனது பெயரில் நாணயங்களை வெளியிடுவதையும், குத்பா படிப்பதையும் இவர் விரும்பியதில்லை.

↳ இந்தியாவில் துருக்கிய ஆதிக்கத்தை தொடங்கி வைத்தவர் → குத்புதீன் ஐபக்.

↳ குத்புதீன் பட்டமேற்ற உடனே தமது ஆட்சியை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருந்தார்.

(i) கவாரிசம் பகுதியின் ஆட்சியாளன் முகமது அலாவுதீன், டெல்லி மற்றும் கஜினியை கைப்பற்றாமல் தடுப்பது.

(ii) வங்காளத்தின் ஆட்சியாளன் அலிமார்த்திகான் மற்றும் வங்காளம் கபாச்சா, யல்துஸ் ஆகியவர்களை அடக்கி துருக்கிய ஆட்சியை பாதுகாப்பது.

## 2. இல்துத்மிஷ் :-

↳ மத்திய ஆசியாவில் வாழ்ந்த இல்பார் என்ற பழங்குடி இனத்தில் பிறந்தவர் இல்துத்மிஷ். எனவே இவரது அரசு இல்பாரி குலம் எனப்பட்டது.

↳ இல்துத்மிஷ், அவரது ஒன்றுவிட்ட சகோதரர்களால் அடிமையாக விற்கப்பட்டார். ஐபக் ஐபக்கிடம் தமது மகளை இல்துத்மிஷ்க்கு திருமணம் செய்துவைத்து மருமகனாக்கிக் கொண்டார். பின்னர், இல்துத்மிஷை குவாலியரின் இக்தாதார் பதவியிலும் அமர்த்தினார்.

↳ 1211-ல் இல்துத்மிஷ் ஆரம்பக்ஷை விரட்டிவிட்டு சுல்தானாக பதவியேற்றார்.

↳ இல்துத்மிஷ் தன் தலை நகரை லாகூரிலிருந்து டெல்லிக்கு மாற்றினார்.

↳ மங்கோலியர்களின் தலைவனான செங்கிஸ்கான் என்று அனைவராலும் அழைக்கப்படும் தெமுஜின், மத்திய ஆசியா மீது படையெடுப்பைத் தொடங்கியிருந்தார். அங்கு குவாரிசம் ஆட்சியாளரான ஜலாலுதீன் மங்கபர்னி என்பவரை செங்கிஸ்கான் என்ற தெமுஜின் துரத்தியடித்தார். மங்கபர்னி சிந்து நதியைக் கடந்து இந்தியாவிற்குள் நுழைந்த மங்கபர்னி இல்துத்மிஷிடம் புகலிடம் கேட்டார். மங்கோலியர்களிடமிருந்து இந்தியாவைக் காப்பாற்றுவதற்காக மங்கபர்னிக்கு

புகலிடம் கொடுக்க இல்துத்மிஷ் மறுத்தார். இச்செயல் மங்கோலிய படைத்தலைவர் செங்கிஸ்கானை மகிழ்ச்சியடையச் செய்தது. எனவே மங்கோலியர்கள் டெல்லியை முற்றுகையிடவில்லை. இதனால் இல்துத்மிஷ் மங்கோலியரின் படையெடுப்பிலிருந்து டெல்லியைப் பாதுகாத்துக் கொண்டார்.

↳ இல்துத்மிஷ் 1230-ல் வங்காளத்தில் ஏற்பட்ட கில்ஜி மாலிக்குகளின் கலகத்தை அடக்கினார்.

↳ முகமது கோரியின் வழித்தோன்றல் என எண்ணிய யல்துஸ் என்பவரை இல்துமிஷ் தோற்கடித்துக் கொன்றார்.

↳ வங்காளம், பீகார் மீது படையெடுத்த இல்துத்மிஷ் அங்கு தமது கட்டுப்பாட்டை உறுதி படுத்திக் கொண்டார். சிந்து, முல்தான் பகுதிகளையும் டெல்லி சுல்தானியத்துடன் இணைத்தார். ராசபுத்திரர்களின் கிளர்ச்சிகளை ஒடுக்கிய அவர், ரந்தம்பூர், ஜாலோர், அஜ்மீர், குவாலியர் போன்ற அரசுகளை மீண்டும் கைப்பற்றினார். மாளவத்தின் பரமாரர்களுக்கு எதிராக அவர் மேற்கொண்ட படையெடுப்பு பலனளிக்கவில்லை.

கச்சார் எனப்படும் கங்கை-யமுனை இடையிலான [தோ அப்] பகுதியையும் இணைத்தார்.

↳ இல்துத்மிஷ் 1229-ம் ஆண்டு காலிப்பிடம் இருந்து அனுமதிப் பத்திரத்தைப் பெற்று, இந்தியாவின் சட்ட முறையான ஆட்சியாளரானார்.

↳ மங்கோலியர்கள் மீது போர் தொடுக்க ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த நிலையில் 1236-ல் உடல் நலக் குறைவால் இல்துத்மிஷ் மரணமடைந்தார். இறப்பதற்கு முன் தனது மகள் இரசியாவை நாட்டின் அரசியாக அறிவித்தார்.

டெல்லி சுல்தானியத்திற்கு பரம்பரை வாரிசு முறையை இவ்வாறு இல்துத்மிஷ் தொடங்கி வைத்தார்.

இல்துத்மிஷின் நிர்வாகம் :- ↳ மாகாண ஆளுநர்கள் முக்திஸ் (அ) வாலிஸ் (அ) இக்தாதார் எனப்பட்டனர்.

↳ நாடு → இக்தா (மாகாணம்) → ஷிக்தா (மாவட்டம்) → பர்கானா → கிராமம்.

இக்தா → இக்தாதார்; ஷிக்தா → ஷிக்; கிராமம் → அமில்

↳ கிராம கணக்கர் பட்வாரி என்பவராவார்.

↳ படைப் பிரிவில் "நாற்பதின்மர் குழு" அறிமுகம். இவர்கள் சகல்கான்கள் எனப்பட்டனர்.

↳ அரேபிய மொழியில் நாணயங்களை வெளியிட்ட முதல் துருக்கியர் என்ற சிறப்பை இல்துத்மிஷ் பெற்றார். 175 கிராம் எடை கொண்ட "தாங்கா" என்ற வெள்ளி நாணயம் இடைக்கால இந்தியா முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தற்காலத்திய ரூபாய்க்கு அவரது வெள்ளி நாணயமே அடிப்படை என்று கூறலாம். இல்துத்மிஷ் ஜிடால் என்ற செம்பு நாணயமும் வெளியிட்டார்.

iting start:-

**தல்த்துத் மிஷ் அவையை அலங்கரித்தவர்கள்:-**

↳ (i) மின்ஹாஜ் - உஸ் - சிராஜ் → 1260 ஆண்டு வரையிலான முஸ்லிம் அரச குலங்களின் வரலாற்றை தபாகத்-இ-நாசரி என்ற பெயரில் எழுதியுள்ளார்

(ii) தாஜுதீன்

(iii) நிசாம் உல் முல்க் முகமது ஜுனைதி

(iv) மாலிக் குத்புதீன் ஹசன்

(v) பக்ருல் முல்க் ஈ. சாமி

↳ இந்தியாவின் மிக உயர்ந்த கட்டிடமான [71 மீட்டர் (or) 238 அடி] குதுப்மினாரை இல்துத்மிஷ் கட்டி முடித்தார் [ஆரம்பித்தவர் - குத்புதீன் ஐபக்]

↳ அஜ்மீரில் அழகிய மசூதி ஒன்றையும் கட்டினார்.

## 4. சுல்தானா இரசியா [1236-1240]:-

↳ இல்துத்மிஷ் தனது மகள் ரசியாவை அரியணைக்கு வாரிசாக நியமித்திருந்தார். ஆனால் டெல்லியின் காஸி மற்றும் வாசிர் இருவரும் ருக்னுதீன் பிரோஸ் என்பவரை அரியணையில் அமர்த்தினார்.

முல்தானில் நடைபெற்ற கலகத்தை ஒடுக்குவதற்கு ருக்னுதீன் பிரோஸ் சென்றார். அத்தருணத்தை பயன்படுத்திக் கொண்ட இரசியா டெல்லியின் அமீர்கள் ஆதரவோடு அரியணையைக் கைப்பற்றிக் கொண்டார்.

அபிசீனிய அடிமையான யாகூத் என்பவரை குதிரைப் படைத் தலைவனாகவும் நியமித்தார். ஆடை தரித்து அரசவையில் ரசியா அமர்ந்தார். வேட்டைக்குச் செல்வது, படை நடத்துவது உள்ளிட்ட செயல்களிலும் ரசியா ஈடுபட்டார்.

↳ சுல்தான்கள் வரிசையில் வந்த முதல் பெண்ணரசி இரசியா ஆவார்.

↳ 1240 ஆம் ஆண்டு அல்தூனியா என்ற பதிண்டாவின் ஆளுநர் ரசியாவுக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டார். இந்தப்போரில் இரசியாவின் குதிரைப்படைத் தலைவனாகிய யாகூத்தை அல்தூனியா கொன்றுவிட்டு, இரசியாவை சிறைபிடித்தார். இதற்கிடையில் துருக்கிய உயர்குடியினர் இல்துத்மிஷின் மற்றொரு மகனான பஹ்ரம் என்பவரை அரியணையில் அமர்த்தினர்.

↳ பஹ்ரம் ஷா [1240-42]
↳ அலாவுதீன் மசூத் [1242-1246]
↳ நசிருதீன் மகமுத் [1246-1264]
↳ பால்பன் [1265-1287]

- இந்த 3 பேர் பேர் மற்றும் இரசியா இந்த 4 பேரும் இல்துத்மிஷின் மக்கள்.

↳ 1246-ல் பால்பன் இல்துத்மிஷின் இளைய மகனான நசிருதீன் மகமுதை சுல்தானாக நியமித்தார்.

~~[illegible]~~

## பால்பனது ஆட்சிக்காலம் : [1246 - 1287]

↳ பால்பன் துருக்கிய இனத்தில், இல்பாரி என்னும் பிரிவைச் சேர்ந்தவர்.

↳ உலுக்கான் என்றழைக்கப்பட்ட பால்பன், சுல்தான் நசீருதீன் மகமுத்-வின் நாயப் (அ) அரசப் பிரதியாக செயல்பட்டார்.

↳ பால்பன் தனது மகளை சுல்தானுக்கு மணமுடித்துக் கொடுத்து அவரது வலிமையையும் பெருக்கிக் கொண்டார். ஆட்சித்துறையை பால்பன் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.

↳ 1266-ல் நசிருதீன் மகமுத் வாரிசு ஏதுமின்றி இறந்துவிடவே பால்பண் அரியணையேறினார்.

↳ அரசப் பிரதியாக செயல்பட்ட அனுபவம் பால்பனுக்கு டெல்லி சுல்தானியத்தின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள ஏதுவாயிற்று.

↳ பால்பன் "நாற்பதின்மர் குழு" என்ற அமைப்பு முறையை ஒழித்தார்.

↳ பால்பன் "தெய்வீக உரிமைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவர்". (இக்கோட்பாடுபடி அரசன் கடவுளின் பிரதிநிதி.)

↳ பால்பனது கருத்துப்படி "அரசன் இறைவனது நிழல் போன்றவன்" "இறைவனால் பூமிக்கு அனுப்பி வைக்கப்பட்டவன்". எனவே, பால்பன் தீவிரமான அரசவை நடைமுறைகளை அறிமுகப்படுத்தினார்.

பைபோஸ் முறை.

↳ சுல்தான் முன்பு மண்டியிட்டு வணங்கி காலைத்தொட்டு முத்தமிடுதல் என்ற வழக்கத்தை பின்பற்றச் செய்தார். இதனால், உயர் குடியினரை விட சுல்தான் உயர்ந்தவர் என்பது உணர்த்தப்பட்டது.

↳ பால்பன் தனது செல்வத்தையும் வலிமையையும் உயர்குடியினருக்கும் மக்களுக்கும் எடுத்துக்காட்டும் விதத்தில் "நவ்ரோஸ்" என்ற பாரசீகத் திருவிழாவையும் ஆடம்பரமாக கொண்டாடினார்.

↳ பால்பன் துருக்கிய உயர்குடியினருடன் நலன் நாடுபவராக இருந்தார். பிற உயர்குடியினருடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள தயாராக இல்லை. இந்திய முஸ்லிம்களுக்கு அரசாங்கத்தின் முக்கிய பதவிகளை அவர் வழங்கவில்லை.

↳ ஒற்றர் படையை அறிமுகம் செய்தார்.

↳ பதுவான் மாகாண ஆளுநரான மாலிக் பக்பக் என்பவரை, அவரது பணியாளர்களைத் துன்புறுத்தினார் என்பதற்காக பொது இடத்தில் வைத்து மாலிக் பக்பக்கை சவுக்கடி கொடுத்தார்.

↳ அயோத்தியின் ஆளுநரான ஹைபத்கான் குடிபோதையிலிருந்தவனை கொன்றான் என்பதற்காக தண்டித்தார்.

↳ படவுனின் ஆளுநர் ஷெர்கான் விஷம் வைத்து கொல்லப்பட்டார்.

→ இதன் தலைவர் → அரிஸ்-இ-முமாலிக்.

→ பால்பன் "திவானி அர்ஸ்" என்ற ராணுவத் துறையை ஏற்படுத்தி ராணுவ நிர்வாகத்தை சீரமைத்தார்.

→ மேவாடிஸ் என்ற கொள்ளையர்களால் டெல்லியின் புறநகர் பகுதிகள் அடிக்கடி சூறையாடப் பட்டன. பால்பன் இதனைத் தடுத்தார்.

→ 1279-ம் ஆண்டு வங்காள ஆளுநர் துக்ரில்கான் பால்பனுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டார். அக்கிளர்ச்சி ஒடுக்கப்பட்டு அவரது தலை துண்டிக்கப்பட்டது.

→ வட மேற்கு இந்தியாவில் மங்கோலியர்கள் மீண்டும் படையெடுத்து வந்தனர். பால்பன் தனது மகன், இளவரசன் முகமது தலைமையிலான படைகளை மங்கோலியருக்கு எதிராக அனுப்பி வைத்தார். ஆனால், முகமது போரில் கொல்லப்பட்டார். பால்பன் 1287-ல் இறந்தார்.

→ பால்பனை அடுத்து அவரது பேரன் கைகுபாத் பட்டமேற்றார். ஆனால் அரசபதவிக்கு தகுதியற்றவராக இருந்தார். சிறுவனாகிய - கைகுபாத்தின் மகன் கையுமார் என்பவரை உயர்குடியினர் மன்னராக்கினர். அவருக்கு பாதுகாவலராக, தளபதியான ஜலாலுதீன் கில்ஜி நியமிக்கப்பட்டார். ஆனால்,

ஜலாலுதீன் கில்ஜி கைகுபாத், கையுமார் ஆகிய இருவரையும் கொன்று டெல்லியின் மன்னரானார். இதன்படி மாம்லுக் மரபு முடிவுற்று கில்ஜி மரபினர் டெல்லி சுல்தானியத்தை ஆளத் தொடங்கினர்.

## பால்பன் பற்றிய ஒரு மதிப்பீடு:

↳ கற்றவரை ஆதரித்தார். இந்தியக்கிளி → அமீர் குஸ்ருவையும் அமீர் ஹாசன் என்ற அறிஞரையும் இவர் ஆதரித்தார்.

↳ அடிமை வம்சத்தில் சிறந்த அரசர் → பால்பன்.

↳ பால்பன் ஒரு அடிமை, தண்ணீர் சுமக்கும் தொழிலாளி, வேட்டைக்காரன், தளபதி, சுல்தானாக வாழ்ந்தவர்.

↳ ராணுவத் துறை திவானி அர்ஸ் என அழைக்கப்பட்டது. இதன் தலைவர் அரிஸ் - இ - முமாலிக். படைவீரர்களை சேர்ப்பதும், ராணுவத் துறையை நிர்வகிப்பதும் இவரது பொறுப்பாகும். இவர் படைத்தளபதி அல்ல என்பதை குறிப்பிட வேண்டும். சுல்தானே படைக்கு தளபதி ஆவார். பால்பன் ஆட்சிக்காலத்தில் தான் படைத்துறை உருவாக்கப்பட்டது.

i) அமீர் குஸ்ரு → அமீர் குஸ்ரு சிறந்த பாரசீக கவிஞர். அமீர் குஸ்ரு சபாக் - இ - இந்த் என்ற இந்தியப் பாணியிலான பாரசீக கவிதை வடிவத்தை உருவாக்கினார். சில இந்திப் பாடல்களையும் எழுதியுள்ளார்.

↳ அமீர் குஸ்ரு அலாவுதீன் கில்ஜியின் வெற்றிகளைக் கூறும் காசெய்ன் - உல் - ∴ புதூ என்ற நூலையும் எழுதியுள்ளார்.

↳ அமீர் குஸ்ருவின் புகழ்பெற்ற நூல் → துக்ளக் நாமா [கியாசுதீன் துக்ளக்கின் எழுச்சி பற்றிய நூல்]

# கில்ஜி வம்சம். [1290 - 1320]

## 1. ஜலாலுதீன் - பெரோஸ் - கில்ஜி [1290-1296] :-

↳ இந்தியாவில் முஸ்லிம் பேரரசு அதன் உச்சகட்டத்தை தொட்டது கில்ஜிகளின் ஆட்சிக் காலத்தில் தான்.

கில்ஜி வம்சத்தை நிறுவியர் → ஜலாலுதீன் கில்ஜி.

ஆட்சிக்கு வந்த போது அவருக்கு வயது 70.

கருணை மனம் படைத்தவர். பால்பனின் மருமகனான மாலிக் சஜ்ஜு என்பவரை காராவின் ஆளுநராக தொடர்ந்து இருக்க இவர் அனுமதித்தார். அவரது தாராள மனதை சஜ்ஜு தவறாகப் புரிந்து கொண்டு கலகத்தில் இறங்கினார். ஆனால் ஜலாலுதீன் கலகத்தை ஒடுக்கி சஜ்ஜுவை மன்னிக்கவும் செய்தார்.

தக்கர்கள் நாட்டை கொள்ளையடித்து வந்தனர். அவர்களை கைப்பற்றிய ஜலாலுதீன் எச்சரித்து, மன்னித்து விடுதலை செய்தார்.

↳ 1292-ல் மாலிக் சஜ்ஜு இரண்டாம் முறையாக கிளர்ச்சியில் ஈடுபட்டபோது அவரை நீக்கிவிட்டு, தனது மருமகன் மற்றும் சகோதரியின் மகன் அலாவுதீன் கில்ஜியை காராவின் ஆளுநராக நியமித்தார்.

→ 1296 - ல் அலாவுதீன் கில்ஜி தேவகிரி மீது படையெடுத்து ஏராளமான செல்வத்துடன் காரா திரும்பினார். அப்போது அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்துகொண்ட மாமனாரும் சுல்தானுமான ஜலாலுதீன் கில்ஜியை சதி செய்து கொன்றுவிட்டு அலாவுதீன் கில்ஜி டெல்லி அரியணையைக் கைப்பற்றினார்.

→ ஜலாலுதீன் → "கருணை உள்ளம் கொண்ட ஜலாலுதீன்" என்று புகழப்பட்டார்.

→ டெல்லி தலைநகர். Next புதிய தலைநகர் – சீரி.
↓
துறைமுகவாயில்
அலைதர்வாசா.

## 2. அலாவுதீன் கில்ஜி [1296 – 1316] :-

↳ டெல்லிக்கு வந்த அலாவுதீன் கில்ஜி தம்மை வெறுத்த உயர்குடியினருக்கும், டெல்லி அமீர்களுக்கும் ஏராளமான செல்வத்தை வாரிக் கொடுத்து அவர்களை தம்பக்கம் சாய்த்துக் கொண்டார்.

↳ உயர் குடியினரின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கு அலாவுதீன் கில்ஜி விதிமுறைகளை வகுத்தார்.

(i) உயர்குடியினரிடமிருந்த அளவற்ற செல்வம்
(ii) உயர்குடியினரிடையே காணப்படும் மண உறவு
(iii) திறமையற்ற ஒற்றர் முறை
(iv) மது அருந்துதல்

போன்றவையே கிளர்ச்சிகளுக்கு அடிப்படை காரணங்கள் என்று அலாவுதீன் கில்ஜி கருதினார்.

எனவே அவர் நான்கு அவசர ஆணைகளை பிறப்பித்தார்.

(i) உயர்குடியினரின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன.
(ii) ஒற்றர்முறையை செம்மையாக சீரமைத்தார்.
(iii) மது விற்பனை தடை செய்யப்பட்டது.
(iv) சுல்தானின் அனுமதியின்றி விழாக்களும், கேளிக்கைகளும் நடத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டன.

↳ இத்தகைய கடும் நடவடிக்கையினால் அவரது ஆட்சிக் காலத்தில் கிளர்ச்சிகள் தவிர்க்கப்பட்டன.

## அலாவுதீன் கில்ஜியின் சீர்திருத்தங்கள்:-

↳ அலாவுதீன் கில்ஜி நிலையான பெரும் படையை வைத்திருந்தார். படைவீரர்களுக்கு ஊதியம் அரசுக் கருவூலத்திலிருந்து பணமாக செலுத்தப்பட்டது.

பெரிய அளவிலான ஒரு நிரந்தரப் படையை உருவாக்கிய முதல் சுல்தான் அலாவுதீன் கில்ஜி

பெரிஷ்டாவின் கூற்றுப்படி,
அலாவுதீன் கில்ஜி 4,75,000 குதிரை வீரர்களை பணியில் அமர்த்தியிருந்தார்.

↳ குதிரைகளுக்கு சூடு போடும் "தாக்" முறையை அறிமுகம் செய்தார். ஹூலியா என்ற படை வீரர்களின் பட்டியலும் தயாரிக்கப்பட்டது.

↳ அலாவுதீன் கில்ஜி அங்காடி சீர்திருத்தங்களை மேற்கொண்டார். அவர் நான்கு தனித்தனி அங்காடிகளை நிறுவினார்.

1. தானியங்கள்
2. துணிமணிகள், சர்க்கரை, உலர்ந்த பழங்கள், எண்ணெய்.
3. குதிரைகள், அடிமைகள், கால்நடைகள்.
4. பல விதமான பொருட்கள்.

↳ ஒவ்வொரு அங்காடியும் ஷஹானா-இ-மண்டி என்ற உயர் அதிகாரியின் கட்டுப்பாட்டில் இருந்தது.

↳ அனைத்து வகைப் பொருளுக்கும் விலை நிர்ணயம் செய்ய "திவானி ரியாசத்" என்ற தனித்துறை ஏற்படுத்தப்பட்டது. நாயப் இ ரியாசத் என்ற அதிகாரியின் கீழ் இத்துறை செயல்பட்டது. ஒவ்வொரு வணிகரும் இத்துறையில் பதிவு செய்திருக்க வேண்டும்.

↳ இந்த அங்காடிகள் செயல்படும் விதம் பற்றி சுல்தானுக்கு ரகசிய அறிக்கைகளை அனுப்புவதற்கு "முன்வறியான்கள்" என்ற ரகசிய முகவர்கள் இருந்தனர்.

↳ பல்வேறு பொருட்களின் விலை மற்றும் எடையை சரிபார்ப்பதற்கு சுல்தான் தனது அடிமைச் சிறுவர்களை அங்காடிகளுக்கு அனுப்பி பொருட்களை வாங்கிவரச் செய்வது வழக்கம்.

↳ பஞ்ச காலங்களில் கூட ஒரே விலை விற்கப்பட்டது.

↳ டெல்லியில் நடைமுறையிலிருந்து அங்காடி விதிமுறைகள் மாகாண தலை நகரங்களிலும், பிற நகரங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டதா என்று தெரியவில்லை.

↳ நில அளவைக்கு ஏற்பாடு செய்த முதலாவது டெல்லி சுல்தான் → அலாவுதீன் கில்ஜி.

↳ அலாவுதீன் கில்ஜி வருங்காலத்தில் ஷெர்ஷா, அக்பர் போன்றவர்கள் மேற்கொண்ட நிலவருவாய் சீர்திருத்தங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார்.

## அலாவுதீன் கில்ஜி படையெடுப்புகள் :-

↳ மங்கோலியருக்கெதிராக அலாவுதீன் கில்ஜி 6 முறைகள் படைகளை அனுப்பி வைத்தார். ஆனால், 3-வது படையெடுப்பின் போது மங்கோலியத் தலைவர் குவாஜா டெல்லி வரை முன்னேறினார். இருப்பினும் தலை நகருக்குள் வராமல் தடுக்கப்பட்டார்.

↳ குஜராத், மேவார், தக்காணம் ஆகியவற்றின் மீது அலாவுதீன் கில்ஜி மேற்கொண்ட படையெடுப்புகள் குறிப்பிடத் தக்கவை.

1299-ல் நுஸ்ரத்கான், உலுக்கான் இருவரையும் குஜராத்தை கைப்பற்றும்படி அனுப்பி வைத்தார். மன்னரும் அவரது மகளும் தப்பிவிட்ட போதிலும், அரசி மட்டும் கைது செய்யப்பட்டு டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். குஜராத் படையெடுப்பின் போது தான் காபூர் என்ற அலி கைப்பற்றப்பட்டு டெல்லிக்கு கொண்டு செல்லப்பட்டான். அவனுக்கு மாலிக் நாயக் பதவி வழங்கப்பட்டது.

↳ 1301-ல் அலாவுதீன் கில்ஜி ராந்தம்பூருக்கு எதிராக போர் தொடுத்தார். ராசபுத்திர பெண்கள் "ஜவ்ஹர்" முறைப்படி தீக்குளித்து மாண்டனர்.

↳ அலாவுதீன் கில்ஜியின் அடுத்த இலக்கு சித்தூர்.

ராஜஸ்தானில் வலிமையான அரசு சித்தூர்.

ராஜா ரத்தன் சிங்கும் அவனது வீரர்களும் வீரத்துடன்

போரிட்டனர். ஆனால் தோற்றனர். ராணி பத்மினி உள்ளிட்ட

ராசபுத்திர மகளிர் தீக்குளித்தனர்.

ராணி பத்மினி கதையை பத்மாவத் என்ற நூலில்

ஜெயசி அழகாக விளக்கியுள்ளார்.

↳ டெல்லி சுல்தான்களில் முதன் முதலில் தென்னிந்திய படையெடுப்பை நடத்தியவர் – அலாவுதீன் கில்ஜி.

↳ அலாவுதீன் கில்ஜியின் தக்காணப் படையெடுப்பும்,

தென்னிந்திய வெற்றிகளும் குறிப்பிடத்தக்கவை.

தெற்கில் நான்கு முக்கிய அரசுகள் இருந்தன.

3 பேரும் மாலிக்கபூரிடம் தோற்றனர்

(i) தேவகிரி யாதவர்கள். [அரசர் இராமச்சந்திர தேவன்]

1309 → (ii) வாரங்கல் காகதீயர்கள். [அரசர் 2-ம் பிரதாபருத்ரன்]

(iii) துவார சமுத்திரத்தில் ஹொய் சாளர்கள் [3-ம் வீரபல்லாளன்]

(iv) மதுரைப் பாண்டியர்கள்.

↳ அலாவுதீன் கில்ஜி தமது நம்பிக்கைக்குரிய

தளபதி மாலிக்கபூரை தென்னிந்திய அரசர்களுக்கு

எதிராக அனுப்பினார்.

GRF

↳ மாலிக்கபூர் 4-வதாக பாண்டியப் பேரரசில் நிகழ்ந்த

வாரிசுரிமைப் போரில் தலையிட்டு வீர பாண்டியனுக்கு எதிராக

சுந்தரபாண்டியனுக்கு உதவியதோடு, சுந்தர பாண்டியனை

பாண்டிய அரியணையில் அமரச் செய்தார்.

↳ பின்னர் இராமேஸ்வரம் வரை சென்று அங்கு ஒரு பள்ளி வாசலைக் கட்டினார்.

## அலாவுதீன் கில்ஜியின் ஆட்சிமுறை:-

↳ அலாவுதீன் கில்ஜி தம்மை "கடவுளின் பிரதிநிதி" யாகக் கருதினார்.

## அலாவுதீன் கில்ஜி:-

↳ i) பாமத்கானா மசூதி

ii) புதிய தலைநகர் சீரி மற்றும் புகழ் வாய்ந்த நுழைவு வாயிலான "அலைதர்வாசா".

iii) சீரிக் கோட்டை

iv) ஆயிரம் தூண்கள் அரண்மனை.

v) ஹரத் நிசாம்முதீன் அவுயாவின் தர்கா.

ஆகியவற்றைக் கட்டினார்.

→ அலாவுதீன் கில்ஜியின் வெற்றியைக் கூறும் நூல் → காசையின் - உல் - புதே.

↳ அமீர் குஸ்ரு, அமீர் ஹாசன் புலவர்களை ஆதரித்தார்.

↳ அலாவுதீன் கில்ஜி எழுத்தறிவில்லாதவர்.

↳ கில்ஜிகள் காலத்தில் ஒரு வெள்ளி தாங்கா = 48 ஜிடால்.

↳ அலாவுதீன் கில்ஜியின் தென்னிந்திய படையெடுப்புக்குப் பின் தினார் எனப்படும் தங்க நாணயங்கள் புகழ்பெற்று விளங்கின. செப்பு நாணயங்கள் மிகக் குறைவாகவும், தேதிகள் இன்றியும் காணப்படுகின்றன.

↳ குதுப்மினாருக்கு அலாவுதீன் கில்ஜி அலைதர்வாசா என்ற நுழைவாயிலை அமைத்தார். அதன் குவிமாடம் அறிவியல் பூர்வமாக உருவாக்கப் பட்டுள்ளது.

↳ அலாவுதீன் கில்ஜி 1316-ல் மரணமடைந்தார்.
அவருக்கு பின்னர் (i) குதுப் உத்தீன் முபாரக்ஷா [1316-20]
(ii) நஸிர் உத்தீன் குஸ்ரு ஷா [1320-20]
ஆட்சி செய்தனர்.

↳ கில்ஜி மரபு 1320-ல் முடிவுற்றது.

↳ 1320-ல் பஞ்சாபின் ஆளுநர் காஸிமாலிக்,
உயர்குடியினர் உதவியுடன் டெல்லியைக் கைப்பற்றி
"கியாசுதீன்" என்ற பட்டப் பெயருடன் துக்ளக் மரபின்
ஆட்சியை ஏற்படுத்தினார்.

# 3. துக்ளக் வம்சம் :- [1320 - 1414]

1. கியாசுதீன் துக்ளக் எனப்படும் காஸிமாலிக் [1320 - 1325]
   ↳ 1325-ல் இறந்தார்.

2. முகமது பின் துக்ளக் (ஜூனாகான்) [1325 - 1351]
   ↳ 1329 - 30 முகமது பின் துக்ளக் அடையாள நாணயத்தை வெளியிட்டார் [அறிமுகப்படுத்தினார்]
   ↳ 1336-ல் விஜயநகரப் பேரரசு தோற்றுவிக்கப்பட்டது.
   ↳ 1347-ல் பாமினி அரசு நிறுவப்பட்டது.
   ↳ 1351-ல் முகமது பின் துக்ளக் [ஜூனாகான்] இறப்பு.

3. பிரோஸ் துக்ளக் [1351 - 1388] :-
   ↳ 1388-ல் இறந்தார்.

4. இரண்டாம் கியாசுதீன் துக்ளக் ஷா

5. அபுபக்கர் ஷா.

6. நாசிர் - உத்தீன் - முகமது

## 1. கியாசுதீன் துக்ளக் எனப்படும் காஸிமாலிக் [1320-25]:-

↳ கியாசுதீன் துக்ளக் எனப்படும் காஸிமாலிக் 1320-ல் துக்ளக் வம்சத்தை நிறுவினார்.

↳ கியாசுதீன் துக்ளக் எனப்படும் காஸிமாலிக் தனது மகன் ஜூனாகான் என்பவரை வாரங்கல்லுக்கு எதிராக படையுடன் அனுப்பி வைத்தார். பிரதாபருத்ரனை முறியடித்து பெரும் பொருளுடன் ஜூனாகான் நாடு திரும்பியவுடன் தனது தந்தையை சதி செய்து கொன்று விட்டு 1325-ம் ஆண்டு முகமது பின் துக்ளக் என்ற பட்டத்துடன் அரியணையேறினார்.

↳ கியாசுதீன் துக்ளக் தனது ஆட்சிக் காலத்தில் துக்ளகாபாத் நகருக்கு அடிகோலினார். மற்றும் துக்ளகாபாத் அரண்மனையினுள் அமைந்துள்ள அழகிய ஏரி ஆகியன அமைக்கப்பட்டன.

↳ துக்ளக் வம்சத்தின் வரலாற்றை பரானி,

பரானி —> தாரிகி பிரோஸ் ஷாஹி என்ற பெயரில் எழுதினார்.

↳ அமீர் குஸ்ருவின் புகழ்பெற்ற நூல் —> துக்ளக் நாமா [கியாசுதீன் துக்ளக்கின் எழுச்சி பற்றிய நூல்]

## 2. ஜூனாகான் என்ற முகமது பின் துக்ளக் :- [1325-1351].

↳ 1325-ல் ஜூனாகான் என்ற முகமது பின் துக்ளக் ஆட்சியைப் பிடித்தார்.

↳ எகிப்து, சீனா, ஈரான் போன்ற தொலைதூர நாடுகளுடன் அவர் அரசியல் உறவுகளை வைத்திருந்தார்.

↳ பல்வேறு நலம் பயக்கும் தாராள சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். ஆனால், அவரது அனைத்து சீர்திருத்தங்களும் தோல்வியிலேயே முடிந்தன.

↳ ஜூனாகான் என்ற முகமது பின் துக்ளக்கின் சமகால எழுத்தாளர்களான

(i) ஈ. சாமி,
(ii) பரானி,
(iii) இபன் பதூதா

போன்றவர்கள் கூட துக்ளக்கின் ஆளுமை குறித்து தெளிவாக குறிப்பிடவில்லை.

↳ தலைநகர் மாற்றம்
↳ அடையாள நாணயம்
↳ தோ-ஆப் பகுதியில் வரிவிதிப்பு
↳ வேளாண் சீர்திருத்தங்கள்
↳ ஆட்சியில் கிளர்ச்சி

↳ சிறந்த இலக்கிய, சமய மற்றும் தத்துவக் கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்றிருந்த ஒரே டெல்லி சுல்தான் ஜூனாகான் (எ) முகமது பின் துக்ளக்.

↳ மங்கோலியத் தலைவன் தமர்சிரின் என்பாரிடம் நட்பு பாராட்டி, அவருக்கு பெரும் பரிசுப் பொருட்களை அனுப்பி தனது நாட்டை மங்கோலியப் படையெடுப்பிலிருந்து காத்துக் கொண்டார். இதனால் நிதி நிலைமை சீர்குலைந்தது.

## தலைநகர் மாற்றம் :-

↳ இந்திய எல்லைக்கருகில் இருந்த மங்கோலியர்கள் தொடர்ந்து படையெடுத்தனர். தலைநகரை காப்பாற்றுவதற்காக நாட்டின் மையப்பகுதிக்கு தலைநகரை மாற்ற வேண்டுமென துக்ளக் நினைத்தார். மற்றும் தென்னிந்தியா மீது கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவதே அவர் நோக்கம்.

↳ உடனடியாக டெல்லியிலிருந்து தேவகிரிக்கு தலைநகரை மாற்ற உத்தரவிட்டார். 1327-ம் ஆண்டு அதற்கான விரிவான ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

↳ அரசவை, உலேமாக்கள், சூஃபித் துறவிகள் டெல்லியிலிருந்து இடம் பெயருவதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. தேவகிரிக்கு தௌலதாபாத் என்றும் பெயரிடப்பட்டது.

↳ தேவகிரிக்கும் தௌலதாபாத்திற்கும் இடைப்பட்ட தூரம் 1500 கி.மீ. கோடைக்காலத்தில் மேற்கொண்ட கடுமையான பயணம் பலரை பலி கொண்டது.

↳ 2 ஆண்டுகளுக்குப் பிறகு சுல்தான் தௌலதாபாத்தை கைவிட்டு மீண்டும் அனைவரையும் டெல்லிக்கு திரும்புமாறு பணித்தார்.

## அடையாள நாணயம் :-

↳ 1329 - 30 - ம் ஆண்டுகளில் முகமது பின் துக்ளக் அடையாள நாணயத்தை அறிமுகப்படுத்தினார். 14 - ம் நூற்றாண்டில் உலகம் முழுவதும் வெள்ளிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. அடையாள நாணயம் என்பது புதிதல்ல. ஏற்கனவே சீனாவில் குப்ளாய்கான் காகிதப் பணத்தை வெளியிட்டிருந்தார். அதே முறையில் தான், துக்ளக் வெள்ளி தங்க நாணயங்களுக்குப் பதில் செப்பு நாணயங்களை வெளியிட்டார். ஆனால், போலி நாணயங்களை தடை செய்ய அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. பொற்கொல்லர்கள் பெருத்த அளவில் போலி நாணயங்களை உற்பத்தி செய்தனர். இதனால், அங்காடிகளில் புதிய நாணயங்களை வாங்க மறுத்தனர்.

↳ இறுதியாக, முகமது பின் துக்ளக் அடையாள நாணயம் வெளியிடுவதை நிறுத்திவிட்டு, செப்பு நாணயங்களை வெள்ளி நாணயங்களாக அரசுக் கருவூலத்தில் மாற்றிக் கொள்ளலாம் என அறிவித்தார். இதனால் கருவூலம் காலியாகிறது.

↳ பரானியின் கூற்றுப்படி துக்ளகாபாத் தெருக்களில் செப்பு நாணயங்கள் குவியல் குவியலாக காணப்பட்டன.

தோ அப் பகுதியில் வரி விதிப்பு:-

↳ முகமது-பின் - துக்ளக் நடைமுறைப் படுத்திய

(i) தலைநகர் மாற்றம்

(ii) அடையாள நாணயம்

இவ்விரண்டு திட்டங்களும் படுதோல்வியடைந்தன.

அவரது கௌரவம் பாதிக்க பட்டதோடு,

நிதிச் சிக்கலும் ஏற்பட்டது. எனவே, முகமது பின் துக்ளக்

தோ அப் பகுதி குடியானவர்களின்

நிலவரியை உயர்த்தினார்.

[தோ அப் என்பது கங்கை- யமுனை நதிகளுக்கு

இடைப்பட்ட நிலபகுதி]

↳ நிலவரியை உயர்த்திய சமயத்தில் அப்பகுதியில்

கொடிய பஞ்சம் நிலவியது. எனவே, வரிச் சுமையை

தாங்கமாட்டாத குடியானவர்கள் நிலங்களை

விட்டு விட்டு ஓடத் தொடங்கினார்கள். ஆனால்,

முகமது பின் துக்ளக் அவர்களைக் கைப்பற்றி

கடுமையாகத் தண்டித்தார். கலவரம் ஒடுக்கப்பட்டது.

வேளாண் சீர்திருத்தங்கள் :-

↳ நிவாரணம் வழங்குவதும், வேளாண்மையை முன்னேற்றுவதுமே பிரச்சினைக்கு தீர்வாக இருக்க முடியும் என்பதை சுல்தான் தாமதமாகவே உணர்ந்தார்.

இதனால்,

குடியானவர்கள் விதைகள் வாங்கவும் வேளாண்மையைப் பெருக்கவும் தக்காவிக் கடன்கள் வழங்கும் திட்டத்தை முகமது பின் துக்ளக் சுல்தான் அறிவித்தார்.

↳ திவானி கோஹி என்ற வேளாண் துறை ஒன்றையும் சுல்தான் ஏற்படுத்தினார். 70 லட்சரூபாய் அரசு செலவில் 64 சதுரமைல் பரப்பளவில் மாதிரிப் பண்ணை ஒன்றையும் அவர் உருவாக்கினார். இத்திட்டம் பிரோஸ் துக்ளக் காலத்தில் மேலும் விரிவு படுத்தப்பட்டது.

கிளர்ச்சிகள் :-

↳ முகமது பின் துக்ளக் ஆட்சியின் பிற்பகுதியில் உயர்குடியினரும் மாகாண ஆளுநர்களும் பல்வேறு இடங்களில் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். மதுரையில் ஹாசன் ஷா கிளர்ச்சி செய்து சுதந்திர மதுரை சுல்தானியத்தை நிறுவினார்.

↳ 1336-ல் விஜயநகரப் பேரரசு தோற்றுவிக்கப்பட்டது.

↳ 1347-ல் பாமினி அரசு நிறுவப்பட்டது.

↳ குஜராத்தில் தகி மேற்கொண்டிருந்த கிளர்ச்சியை அடக்கச் சென்ற முகமது-பின்-துக்ளக் 3 ஆண்டுகள் அவனை விரட்டுவதில் செலவழித்தார். இதனால் நோய்வாய்பட்ட அவர் 1351-ல் இறந்தார்.

↳ மக்களிடமிருந்து சுல்தானும், சுல்தானிடமிருந்து மக்களும் விடுதலை பெற்றதாக பதௌனி குறிப்பிட்டுள்ளார்.

↳ பரானி என்ற எழுத்தாளர் முகமது-பின்-துக்ளக்கை முரண்களின் மொத்தக் கலவை என்று மதிப்பிட்டுள்ளார்.

↳ டெல்லி சுல்தானியம் முகமது-பின்-துக்ளக்கின் ஆட்சிக் காலத்திலிருந்து அழியத் தொடங்கியது.

முகமது பின் துக்ளக் பற்றிய மதிப்பீடு:-

↳ முகமது பின் துக்ளக் அடையாள நாணய முறையை பரிசித்ததோடு தங்கம், வெள்ளி நாணயங்களையும் வெளியிட்டார். அவை 8 வெவ்வேறு தங்கசாலைகளில் வார்க்கப்பட்டன. குறைந்தது 25 வகைப்பட்ட தங்க நாணயங்கள் முகமது பின் துக்ளக்கால் வெளியிடப்பட்டன.

↳ உயர்ந்த மேடையின் மீது கியாசுதீனின் கல்லறையை
முகமது பின் துக்ளக் அமைத்தார்.

↳ அதாலாபாத் கோட்டை, துக்ளகாபாத், ஜஹான்பனா
ஆகிய நகரங்களை உருவாக்கினார்.

3. பிரோஸ் துக்ளக் :- [1351 - 1388] :-

↳ கியாசுதீன் துக்ளக்கின் இளைய சகோதரரின் மகன் பிரோஸ் துக்ளக் ஆவார். இவர் 1351-ல் ஆட்சியில் அமர்ந்தார்.

↳ தெலுங்கு பிராமண முஸ்லிமான கான்-இ-ஜஹான் மக்பூல் என்பவரை வாசிர் [முதலமைச்சர்] பதவிக்கு பிரோஸ் துக்ளக் நியமித்தார். அவரது ஆலோசனைப்படி சுல்தான் ஆட்சி நடத்தி சுல்தானியத்தின் பெருமையை பாதுகாத்தார்.

பிரோஸ் துக்ளக்கின் படையெடுப்புகள் :-

↳ ஜஜ் நகர் [தற்கால ஒரிசா] மீது படையெடுத்துச் சென்ற பிரோஷ் ஷா பெரும் செல்வத்துடன் திரும்பினார்.

↳ நாகர் கோட் மீது படையெடுத்து அதன் ஆட்சியாளரை திறை செலுத்தும் படி செய்தார். அப்படையெடுப்பின் போது ஜாவலமுகி ஆலய நூலகத்திலிருந்த 1300 வடமொழிச் சுவடிகளைக் கொண்டு வந்தார். அவற்றை பாரசீக மொழியில் மொழி பெயர்க்கச் செய்தார்.

↳ சிந்துப் பகுதியிலிருந்த தட்டா என்ற இடத்தில் நடைபெற்ற கிளர்ச்சியை ஒடுக்கினார்.

## பிரோஸ் துக்ளக்கின் ஆட்சித்துறை சீர்திருத்தங்கள்:-

↳ ஆட்சி நடத்துவதில் உலேமாக்களின் ஆலோசனைப்படி நடந்துகொண்டார்.

↳ இக்தா முறை மீண்டும் கொண்டு வரப்பட்டது.

↳ இஸ்லாமியச் சட்டப்படி வரிகளை விதித்தார்.

↳ முஸ்லிம் அல்லாதவர்கள் மீது ஜிசியா வரி விதிக்கப்பட்டது.

↳ தக்காவி கடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

↳ நீர்ப்பாசன வரி விதித்த முதல் சுல்தான் → பிரோஸ் துக்ளக்.

↳ நீர்ப்பாசனத்துக்காக பல கால்வாய்களையும், கிணறுகளையும் அமைத்தார்.

(i) சட்லஜ் முதல் ஹான்சி வரை 200 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்ட கால்வாயே அவற்றில் மிக நீளமானதாகும்.

(ii) யமுனா முதல் ஹிஸ்ஸா வரை மற்றொரு கால்வாய் வெட்டப்பட்டது.

↳ டெல்லியிலும் அதைச் சுற்றியுமிருந்த 1200 பழத்தோட்டங்களிலிருந்தும் அரசுக்கு நல்ல வருவாய் கிடைத்தது.

↳ பெரோஸ் தோட்டப்பயிர்களை ஊக்கிவித்தார்.

↳ இஸ்லாமிய சட்டத்தில் இடம் இல்லை என்பதால் 28 பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருந்த சிறப்பு வரிகளையும் சுல்தான் ரத்து செய்தார்.

↳ கர்கானாக்கள் என்றழைக்கப்பட்ட அரண்மனைக்குத் தேவையான பொருட்களைத் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளையும் அவர் ஏற்படுத்தினார்.

↳ பிரோஸ் துக்ளக் ஆட்சிக் காலத்தில் 300க்கும் மேற்பட்ட நகரங்கள் நிறுவப்பட்டன.

(எ-கா) பிரோஸாபாத், பெதாபாத், ஜான்பூர், ஹிஸ்ஸார்.

↳ டெல்லி செங்கோட்டைக்கு அருகே அமைக்கப்பட்ட பிரோசாபாத் நகரம் புகழ் மிக்கது. அது தற்காலத்தில் பிரோஸ் ஷா கோட்லா எனப்படுகிறது.

↳ ஜும்மா மசூதி, குதுப்மினார் போன்ற பழைய சின்னங்களையும் அவர் செப்பனிட்டார்.

↳ அனாதைகள்
கைம்பெண்கள் நலனுக்காக
~~[illegible]~~
~~[illegible]~~
} இவற்றிற்கு திவானி கைரத் என்ற புதிய துறை உருவாக்கப்பட்டது.

↳ வேலைவாய்ப்பு அமைப்பு, திருமண அமைப்பு } → திவானி கிரமத்.

↳ மருத்துவ மனைகள் → தார் - உல் - பா.

↳ ஜியாவுத்தீன் பரானி, அபிப் போன்ற அறிஞர்களையும் பிரோஸ் துக்ளக் ஆதரித்தார்.

↳ உலோமாக்களின் பேச்சை மதித்து நடந்த அவர் ஷியா முஸ்லிம்களையும், சூஃபித் துறவிகளையும் சமய சகிப்புத் தன்மையுடன் நடத்தத் தவறினார். இந்துக்கள் மீது ஜிஸியா வரியை கட்டாயமாக்கினார். இந்தமட்டில் அவர் வருங்கால சிக்கந்தர் லோடி, அவுரங்கசீப் ஆகியோருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

↳ பிரோஸ் துக்ளக் மக்களிடமிருந்து 4 விதமான வரிகளை வசூலித்தார்.

1) கரோஜ் - விளைச்சலில் 1/10 பங்கு.

2) கம்ஸ் – போர்களில் கைப்பற்றிய பொருட்களில் 1/5 பங்கு.

3] ஜெஸியா - தலைவரி.

4] ஜகாத் - குறிப்பிட்ட இஸ்லாமிய மதச்சடங்குகளைச் செய்வதற்கு வசூலிக்கப்படும் கட்டணம்.

## பிரோஸ் துக்ளக் பற்றிய ஒரு மதிப்பீடு:

↳ பிரோஸ் துக்ளக் சன்னி பிரிவைச் சார்ந்தவர்.

↳ பிரோஸ் துக்ளக் பூரியில் ஜெகந்நாதர் கோயிலை அழித்தார்.

↳ பதூஹத் - இ - பெரோஷாஹி என்னும் சுயவரலாற்று நூலை எழுதினார்.

↳ பிரோஸ் துக்ளக் ஆட்சிக் காலத்தில் எண்ணற்ற சமஸ்கிருத நூல்கள் பாரசீக மொழியில் மொழி மாற்றம் செய்யப்பட்டது.

↳ சிதாப் பெரோஸ் - ஷாஹி என்ற இயற்பியல் தொடர்பான நூலும் எழுதப்பட்டது.

↳ பிரோஸ் துக்ளக் போரில் தோற்கடிக்கப்பட்ட வீரர்களை அடிமைகளாக்கியதால், அவரது ஆட்சியின் போது அடிமைகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 80,000-ஐ தாண்டியது. 1388-ல் பிரோஸ் இறந்தார். பிரோஸ் துக்ளக் உருவாக்கிய அடிமைகளின் கிளர்ச்சியை அவருக்குப்பின் வந்த ஆட்சியாளர்கள் எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

↳ 1398-ம் ஆண்டு நடைபெற்ற தைமூரின் படையெடுப்பு நிலைமையை மேலும் மோசமாக்கியது. சமர்கண்ட் பகுதியை தைமூர் என்பவர் ஆட்சி செய்தார். நசீர் உத்தீன் முகமது என்பவர் ஆட்சியின் போது அவருடன் போரிட முனைந்து, சிந்து நதியைக் கடந்து டெல்லியை நோக்கி வந்தார். எனவே, நசீர் உத்தீன் முகமது, இவரது தளபதி மல்லு இக்பால் ஆகியோர் தைமூரை எதிர்த்து போரிட்டனர். முடிவில் தைமூரே வென்றார். கிபி 1398-ல் டெல்லி தைமூரால் கைப்பற்றப்பட்டு, சூறையாடப்பட்டு மக்கள் கொல்லப்பட்டனர். 1399-ல் டெல்லியிலிருந்து தைமூர் சென்றுவிட்டார். தைமூரின் படையெடுப்பு துக்ளக் வம்ச ஆட்சிக்கு பேரிடியாக அமைந்தது.

பிரோஸ் துக்ளக் பிறகு ~~[illegible]~~ ஆட்சி புரிந்தவர்கள்:

4. இரண்டாம் கியாசுத்தீன் துக்ளக் ஷா.
5. அபுபக்கர் ஷா.
6. நாசிர் உத்தீன் முகமது துக்ளக்.

↳ 1414 வரை துக்ளக்குகளின் ஆட்சி நடைபெற்றது.

↳ துக்ளக் வம்சத்தின் வரலாற்றை

பரானி → தாரிகி பிரோஷ் ஷாஹி என்ற பெயரில் எழுதினார்

---

**சையதுகள்** : (1414 - 1451) → 4-வது சுல்தானிய வம்சம்.

↳ துக்ளக் மரபின் வீழ்ச்சிக்கு பின்னர் சையது மரபினர் டெல்லியை ஆளத்தொடங்கினர். தைமூர் இந்தியாவை விட்டு செல்லும் முன்பு கிசிர்கான் என்பவரை முல்தானின் ஆளுநராக நியமித்திருந்தார்.

↳ 1414-ல் கிசிர்கான் டெல்லியை கைப்பற்றி சையது மரபைத் தோற்றுவித்தார். 1421-ல் இறந்தார்.

1. கிசிர்கான் [1414 - 1421]
   ↓ மகன்
2. முபாரக்ஷா [1421 - 34]
   ↓ சகோதரனின் மகன்
3. முகமது ஷா [1434 - 1445]

4. அலாவுதீன் ஷா [1445 - 1451]

## 2. முபாரக் ஷா [1421 - 1434]:

↳ முபாரக் ஷா கோகர்களையும், தோ ஆப் பகுதியின் உள்ளூர் தலைவர்களையும் அடக்கினார்.

↳ முபாரக் ஷா டெல்லி நீதிமன்றத்தில் இந்துமத உயர்குடியினரை நியமித்தார்.

↳ முபாரக் ஷா யமுனை நதிக்கரையில் "முபாரக் பாத்" என்னும் நகரை நிர்மாணித்தார்.

↳ முபாரக் ஷா 1434-ல் கொல்லப்பட்டார்.

## 3. முகமது ஷா [1434 - 1445]:

↳ முபாரக் ஷாவின் மரணத்தையடுத்து அவரது சகோதரனின் மகனான முகமது ஷா மன்னரானார். லாகூர் ஆளுநர் பஹ்லுல் லோடி உதவியுடன் மாளவத்தின் மீது படையெடுத்து அதனை வென்றார். இவ்வெற்றிக்குக் காரணமான பஹ்லுல் லோடிக்கு "கானி கானா" என்ற பட்டத்தை சூட்டினார்.

## 4. அலாவுதீன் ஷா [1445 - 1451]:

↳ அலாவுதீன் ஷா திறமையற்று செயல்பட்டதால் லாகூரின் ஆளுநர் பஹ்லுல் லோடி 1451-ம் ஆண்டு டெல்லியின் ஆட்சியை கைப்பற்றினார்.

அலாவுதீன் ஷா 1478-ல் இறந்தார்.

லோடிகள் [1451-1526]:-

↳ சையதுகளை அடுத்து ஆட்சிக்கு வந்த லோடிகள் ஆப்கானியர்கள்.

↳ டெல்லியின் முதல் ஆப்கானிய ஆட்சியாளர் } → பஹ்லுல் லோடி.

இவருக்கு பின்பு ஆட்சி செய்த அனைவரும் துருக்கியர்கள்.

↳ டெல்லி சுல்தான்களில் லோடி மரபே கடைசியாக ஆட்சி செய்தது.

1. பஹ்லுல் லோடி [1451-1489]:- 38

2. சிக்கந்தர் லோடி [சிக்கந்தர் ஷா] [1489 – 1517]:- 28

3. இப்ராகிம் லோடி [1517-1526]. 9

1. பஹ்லுல் லோடி:-[1451-1489]

↳ லோடி மரபைத் தொடங்கியவர் பஹ்லுல் லோடி.

↳ பஹ்லுல் லோடி மேவாட், சம்தல், சகிட், எட்வா, குவாலியர் ஆகிய பகுதிகளை வென்றார்.

↳ 1489-ல் இறந்தார்.

2. சிக்கந்தர் லோடி [சிக்கந்தர் சாகி] [1489 – 1517] :-

↳ பஹ்லுல் லோடியை அடுத்து அவரது மகன் சிக்கந்தர் ஷாஹி [1489 - 1517] சிக்கந்தர் ஷாகி என்றபட்டப்பெயருடன் ஆட்சிக்கு வந்தார்.

↳ சிக்கந்தர் லோடி தமது பேரரசை பஞ்சாப் முதல் பீகார் வரை விரிவுபடுத்தினார்.

↳ சிக்கந்தர் லோடி ஆக்ரா நகரைக் கட்டினார். லோடி மரபினர் காலத்தில் ஆக்ரா நகர் முக்கியத்துவம் பெற்று விளங்கியது.

↳ சிக்கந்தர் லோடி காலத்தில், கணிதம், வானவியல், யோகா, மருத்துவம் உள்ளிட்ட பல சமஸ்கிருத நூல்கள் பாரசீக மொழியில் மொழி மாற்றம் செய்யப்பட்டன.

↳ சிக்கந்தர் லோடி ஷெனாய் இசையை மிகவும் விரும்பினார். லஹ்ஜட் - இ - சிக்கந்தர் ஷாஹி என்ற இசைத் தொகுப்பு இவர் காலத்தில் உருவாக்கப்பட்டது.

↳ சிக்கந்தர் லோடி ஒரு தீவிர இஸ்லாமிய பற்றுடையவர் எனவே இந்துக்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தார்.

↳ லோடி மரபின் சிறந்த அரசரான இவர் 1517-ல் இறந்தார்.

3. இப்ராகிம் லோடி :- [1517 - 1526] :-

↳ சிக்கந்தர் லோடியை அடுத்து இப்ராகிம் லோடி ஆட்சிக்கு வந்தார்.

↳ இப்ராகிம் லோடி அனைவமிக்கவர்.

↳ இப்ராகிம் லோடி தௌலத்கான் லோடியின் மகன் தில்வர்கான் லோடியை கொடுமைப்படுத்தியதால் தௌலத்கான் லோடி, காபூல் மன்னர் பாபரை உதவிக்கு அழைத்தார்.

பாபர் vs இப்ராகிம் லோடி 1526 - முதலாம் பானிப்பட் போர்.

பாபர் வெற்றி.

↳ டெல்லி சுல்தான்களின் ஆட்சிக்கு முகலாயர்கள் முற்றுப்புள்ளி வைத்தனர்.

↳ ஆப்கானியர்களின் அரசு 75 ஆண்டுகளை நீடித்தது.

## டெல்லி சுல்தானியத்தின் கீழ் இந்தியா...

↳ இஸ்லாமிய சமயத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு இஸ்லாமிய அரசாக டெல்லி சுல்தானியம் விளங்கியது.

டெல்லி சுல்தான்கள் தங்களை காலிப்புகளின் பிரதிநிதிகளாகக் கருதிக் கொண்டனர். குத்பா என்ற வழிபாட்டு சடங்கின் போதும், நாணயங்களிலும் காலிப்பின் பெயர் இடம் பெற்றது.

இல்துத்மிஷ், முகமது பின் துக்ளக், பிரோஸ் துக்ளக் ஆகியோர் காலிப்பிடமிருந்து அனுமதிக் கடிதம் பெற்றனர்.

↳ ஆட்சி முறையில் சுல்தானின் பதவி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அவரே அனைத்திலும் இறுதி முடிவு எடுப்பார்.

↳ வாரிசுரிமைப் போட்டி இருந்தது. ராணுவ வலிமையே வாரிசுரிமைப் போட்டியின் போது மிக்கிய காரணியாக இருந்தது.

## சுல்தான்களின் மத்திய அமைச்சர்கள்:

1) நாயப் என்ற பதவி மிகுந்த அதிகாரமுள்ளதாகும். சுல்தானைப் போல அனைத்து அதிகாரங்களையும் பெற்று விளங்கிய நாயப் அனைத்து துறைகளையும் தமது பொதுவான கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். அவருக்கு அடுத்த நிலையில் திவானி விசாரத் என்ற நிதித்துறைக்குப் பொறுப்பான வாசிர் என்ற அதிகாரி இருந்தார்.

பாரசீக மொழி நீதிமன்ற மொழி.

சுல்தான் [அனைத்துப் படைகளுக்கும் தளபதி]
↓
நாயப்
↓
வாசிர் → நிதித்துறை மற்றும் பிரதம அமைச்சர்
↓
அரிஸ் கி முமாலிக் → திவானி அர்ஸ் → ராணுவத்துறை மற்றும் பாதுகாப்பு துறை.
↓
சதர் → திவானி ரிசாலத் → சமய விவகாரங்கள் துறை மற்றும் வெளியுறவுத்துறை.
காசி → நீதித்துறை
↓
பேர் இல்லை → திவானி இன்ஸா - போக்கு வரத்து அஞ்சல் துறை

↳ பால்பன் ஆட்சிக் காலத்தில் தான் படைத்துறை உருவாக்கப்பட்டது. அலாவுதீன் கில்ஜியின் காலத்தில் விரிவுபடுத்தப்பட்டது. [நிரந்தரப்படை].

சுல்தான்களின் பொருளாதாரம்:- வேளாண்மை முக்கியதொழில்.

↳ நிலங்கள் 3 வகையாகப் பிரிக்கப்பட்டன.

1. இக்தா - அதிகாரிகளுக்கு ஊதியத்திற்கு பதிலாக அளிக்கப்பட்ட மான்யங்கள்.
2. காலிசா - சுல்தானின் நேரடி நிர்வாகத்தில் இருந்த நிலங்கள். அதிலிருந்து பெறப்பட்ட வருவாய் அரசவை செலவினங்களுக்கு பயன்படுத்தப்பட்டது.
3. இனாம் - சமயத் தலைவர்களுக்கும் - சமய நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட நிலங்கள்.

↳ பொதுவாக 3-ல் 1 பங்கு வரி.

↳ முகமது - பின் - துக்ளக், பிரோஸ் துக்ளக் நீர்ப்பாசன வசதிகளை செய்து கொடுத்தனர். பார்லிக்கு பதிலாக கோதுமை போன்ற உயர்ந்த ரக பயிர்களை பயிரும்படி குடியானவர்களை ஊக்குவித்தனர்.

↳ சுல்தான்களின் ஆட்சிக் காலத்தில் நகரமயமாக்கம் சூடுபிடித்தது. லாகூர், முல்தான், புரோச், அன்கில்வாரா, லக்னௌதி, தௌலதாபாத், டெல்லி, ஜான்பூர் என்பவை குறிப்பிடத்தக்கவை.

↳ சுல்தான்களின் காலத்தில் பருத்தி மற்றும் பட்டுத்துணிகளின் உற்பத்தி வளர்ச்சி பெற்றது.

↳ 14 மற்றும் 15 நூற்றாண்டுகளிலிருந்தே காகிதம் பெருமளவு பயன்படுத்தப்பட்டது.

↳ டெல்லி சுல்தானிய ஆட்சிக் காலத்தில் நாணயமுறையும் வளர்ச்சி பெற்றது. 

இல்துத்மிஷ் பலவகையான வெள்ளி தாங்காக்களை வெளியிட்டார்.

கில்ஜிகள் காலத்தில் தாங்கா என்பது 48 ஜிடால்.

துக்ளக் காலத்தில் தாங்கா என்பது 50 ஜிடால்.

## டெல்லி சுல்தானியர்களின் சமூக வாழ்க்கை:-

↳ மகளிர் அடிமை; சதி இருந்தது; வட இந்தியாவில் உயர்சாதி இந்துப்பெண்கள் பர்தா அணிந்தனர். இந்தியாவில் அரேபியரும், துருக்கியரும் பர்தா முறையை அறிமுகப்படுத்தினர்.

↳ இந்துக்கள் சிம்மிக்கள் (அ) பாதுகாக்கப்பட்ட குடிகள் எனக் கருதப்பட்டனர்

## கலை கட்டடக் கலை:-

↳ வளைவுகள், குவிமாடங்கள், உயர்ந்த கோபுரங்கள் [அ] மினாரட்டுகள், அரேபிய எழுத்துக்களாலான அலங்கார வடிவமைப்புகள் போன்றவற்றை துருக்கியர்கள் அறிமுகப்படுத்தினர்.

↳ சிவப்பு, மஞ்சள் நிற பளிங்குக் கற்களையும், மணற்பாறைகளையும் பயன்படுத்தினர்.

↳ தொடக்கத்தில் கோயில்களையும் பிற கட்டடங்களையும் உடைத்து அவற்றை மசூதிகளாக மாற்றியமைத்தனர்.

(எ-கா) டெல்லி குதுப்மினாருக்கு அருகிலுள்ள குவாத் உல் இஸ்லாம் மசூதி.

இது பல்வேறு இந்துக் கோயில் மற்றும் சமணக் கோயிலை இடித்துக் கட்டியது.

↳ 13-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரமாண்டமான கட்டடம் - குதுப்மினார்.

↳ விலைக்குறைவான சாம்பல் நிறப் பாறைகளை துக்ளக்குகள் பயன்படுத்தினர்.

↳ லோதிகளின் கட்டடக்கலைக்கு (எ-டு) 1) டெல்லியிலுள்ள லோதி தோட்டம்.
2) மோதி மசூதி
3) சிக்கந்தர் லோதியின் கல்லறை.

## டெல்லி சுல்தான்களின் இசை:

↳ சாரங்கி, ரபாப் போன்ற புதிய இசைக் கருவிகள் அக்காலத்தில் அறிமுகப் படுத்தப்பட்டன.

↳ பிரோஸ் துக்ளக் ஆட்சிக் காலத்தில் ராகதர்பண் என்ற இந்திய இசைநூல் பாரசீக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. பீர்போதன் என்ற சூஃபித்துறவி அக்காலத்திய புகழ்மிக்க இசைமேதைகளில் ஒருவர்.

↳ குவாலியரைச் சேர்ந்த ராஜா மன்சிங் சிறந்த இசைப்பிரியர். மன் கவுத்துகல் என்ற இசை நூல் தொகுக்கப்படுவதற்கு இவர் பெரும் ஊக்கமளித்தார்.

## இலக்கியம்:-

சுல்தானியர் கள் பாரசீக மொழியை ஊக்குவித்தனர்

1. ஹசன் நிசாமி
2. மின் ஹஜ் உஸ் சிராஜ்
3. ரியாவுதீன் பரானி
4. ஷம்ஸ் சிராஜ் அபிப்

} சுல்தான்கள் ஆட்சிக்காலத்திய புகழ்மிக்க அறிஞர்கள்

அமீர் குஸ்ரு :- ↳ அமீர் குஸ்ரு பாரசீக அறிஞர்.
↳ 4 லட்சம் பா.ரசச் செய்யுள்களை எழுதியுள்ளார்.
↳ கோரா, சானம் போன்ற பல புதிய ராகங்களை அமீர் குஸ்ரு அறிமுகம் செய்தார்.
↳ இந்து மற்றும் பா.ரானிய முறைகளை ஒன்றிணைத்து குவாலிஸ் என்ற புதியவகை மெல்லிசைகளையும் அமீர் குஸ்ரு உருவாக்கினார்.
↳ சிதார் இசைக் கருவியும் அமீர் குஸ்ருவின் கண்டுபிடிப்பு.
↳ அமீர் குஸ்ரு இந்தி சொற்களைப் பயன்படுத்தி உள்ளார்.

---

↳ வடமொழியும், பாரசீக மொழியும் டெல்லி சுல்தானியத்தின் இணைப்பு மொழிகளாகத் திகழ்ந்தன.
↳ வடமொழிக் கதைகள் பலவற்றை பாரசீக மொழியில் முதன் முதலில் மொழி பெயர்த்தவர் நக்ஷபி.
↳ துது நாமா அல்லது கிளிமொழி என்ற புகழ்பெற்ற நூல் துருக்கி மொழியிலும் பின்னர் ஐரோப்பிய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டது.
↳ காஷ்மீர் அரசர் ஜெயினுலாபதீன் ஆட்சிக்காலத்தில் கல்கணர் ராஜதரங்கிணியைப் படைத்தார்.
↳ சந்த் பாரயி சிறந்த இந்திக் கவிஞர்.
↳ நுஸ்ரத் ஷா மகாபாரதத்தை வங்காளத்தில் மொழிபெயர்ப்பதற்கு உறுதுணையாக இருந்தார்.

↳ குஜராத்தி, மராத்தி மொழிகள் வளர்வதற்கு பக்தி இயக்கம் வழிவகுத்தது.

↳ விஜய நகரப் பேரரசு தெலுங்கு மற்றும் கன்னடமொழி இலக்கியங்களின் வளர்ச்சிக்கு உதவியது.